

பாமாலை 354A என் களிப்புக்குக் காரணம்

1 என் களிப்புக்குக் காரணம்
என் நல்ல நாதரே
பகலில் நீர் என் மகிமை
ராவில் என் ஜோதியே

2 இருளிலே நீர் தோன்றினால்
என் மனம் மகிழும்
நீர் விடிவெள்ளி ஆனதால்
என்னில் பிரகாசியும்

3 இயசேவைத் தந்த தயவு
என் செல்வமானதால்
என் ஆத்துமா சந்தோஷித்து
மகிழும் வாழ்வினால்

4 நரகத்துக்கும் சாவுக்கும்
அஞ்சாமல் இருப்பேன்
தெய்வன்பும் விசுவாசமும்
கொண்டு நான் வெல்லுவேன்